**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.53/2025 - PW-4**

| | |
|---|---|
| Name | திரு.தனசேகர் |
| Husband/Father Name | தர்ம ரெட்டி |
| Village /Area | அய்யனேரி |
| Taluk | ஆர்.கே.பேட்டை |
| Occupation | கூலி |
| Age | 40 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 17.10.2025.

**(எதிரிகள் 3 முதல் 4 வரை ஆஜர். எதிரி 1 மற்றும் 2 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்தவர் என்னுடைய மாமா ஆவார். அசா.1 என்னுடைய தங்கை ஆவார். கடந்த 05.09.2024 அன்று மாலை 04.15 மணியளவில் என் மாமா சந்திரன் வேலை செய்த கூலியை வாங்கிவர இரு சக்கர வாகனத்தில் சென்றார் அப்போது கீதா மற்றும் அவரது மகன் ஆகாஷ் என்பவர்கள் என் மாமாவை கிழவனம் பள்ளி அருகே அதன் எதிரில் கீதாவின் வீட்டருகே மடக்கி சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது எத்திராஜ் என்பவர் என் அண்ணன் இறந்தது போன்று நீயும் சாவுடா என்று கூறிக்கொண்டு கத்தியை எடுத்து வந்து என் மாமாவை வெட்ட முயற்சித்த போது இடது கையால் தடுத்தார் அப்போது அவர் இடது கையில் வெட்டு காயம் ஏற்பட்டது. பிறகு வெட்டாதே வெட்டாதே என்று தடுத்த போது தலையின் மீது வெட்டினார். என் மாமா மயங்கி விழுந்த நிலையில் சுப்பிரமணி என்பவர் நடிக்கிறாயா என்று சொல்லி

கல்லை எடுத்து என் மாமா சந்திரனின் தலையில் போட்டார்.

சரவணன் என்பவர் எத்திராஜ் கையில் இருந்த கத்தியை பிடிங்கி என் மாமாவின் தலையின் மீது வெட்டினார். மயக்க நிலையில் இருந்த என் மாமா மீது சுப்பிரமணி மறுபடியும் நடிக்கிறியா என்று கூறி கல்லை தூக்கி போட்டார். உடனடியாக அங்கிருந்தவர்கள் ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்து திருத்தணி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். இது சம்பந்தமாக என் தங்கை ஜோதி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரிகள் தரப்பு மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.17 18:14:09 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.